**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 07-ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதி தரப்பு 2-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **ஆனந்தவள்ளி** | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**07.12.2023 OS No. 32/2021 பி.வா.சா.2 ஆனந்தவள்ளி ஆஜர்**

**முதல் விசாரணை :**

1) நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு 2ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 3.3.2001-ம் தேதியிட்டு சிவகங்கை மத்திய கூட்டுறவு வங்கியில் எரிவாயு இணைப்பிற்கு கடன் பெற்றதற்கான கடன் அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். **(கடன் அட்டை சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) 3.3.2001-ம் தேதியிட்டு சிவகங்கை மத்திய கூட்டுறவு வங்கியில் எரிவாயு இணைப்பிற்கு கடன் பெற்றதற்கான ரசீது தாக்கல் செய்கிறேன். **( ரசீது சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

2. அருண் ஏஜென்ஸியிலிருந்து என் பெயருக்கு எரிவாயு இணைப்பு கொடுத்ததற்கான புத்தகம் அசல் தாக்கல் செய்கிறேன். **(புத்தகம் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 2005-2009 காலகட்டத்தற்கான குடும்ப அட்டை அசல் தாக்கல் செய்கிறேன்.**(குடும்ப அட்டை சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எனது வாக்காளர் அடையாள அட்டை அசல் நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(வாக்காளர் அடையாள அட்டை சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** திருப்புவனம் பாரத ஸ்டேட் வங்கியில் என் பெயரிலுள்ள சேமிப்புக்கணக்கு புத்தகம் அசல் தாக்கல் செய்கிறேன். **(சேமிப்புக்கணக்கு புத்தகம் சா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**3.** திருப்புவனம் புதுார் தேனா வங்கியில் என் பெயரிலுள்ள சேமிப்புக்கணக்கு புத்தகம் அசல் தாக்கல் செய்கிறேன்.**(சேமிப்புக்கணக்கு புத்தகம் சா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பு செய்ய வேண்டுகிறேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.